பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 29 வியாழக்கிழமை 12.06.2025 கதிர் 215

### இனி இது ரகசியம் அல்ல!

நல்லூர் பிரதேச சபையில் ஆட்சியைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தத்தில் நேற்று தமிழ் அரசுக் கட்சியும் தமிழ் மக்கள் கூட்டணியும் கையெழுத்திட்டன. ☞2

பிரகீத் எக்னெலிகொட வழக்கில்

# சந்தேகநபரான இராணுவ அதிகாரி முக்கிய சட்சிகளுக்கு அச்சுறுத்தல்

## கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில்

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுகாணாமலாக்கப்பட்ட தொடர்பில் மேல்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளஇராணுவப் புலனாய்வுப்பிரிவின்ஓய்வுபெற்றபிரிகேடியர் ஷம்மி குமாரரத்ன, முக்கிய சாட்சிகளை அச்சுறுத்தினார் எனும் குற்றச்சாட்டின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை (11) முன்னிலைப்படுத்தப்பட்ட அவரை ஜூன் 25 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி காணாமலாக்கப்பட்டார். அதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் அவர் ☞6

# கெஹலியவின் வீட்டுப் பணிப் பெண்ணும் கைது

முன்னாள்சுகாதாரத்துறைஅமைச்சர்கெஹெலிய ரம்புக்வெலவின் இல்லத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணியாற்றிய நிபுனி கிறிஷ்னஜினா ராஜபக்சவை ஜூன் 17 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள்சுகாதாரத்துறைஅமைச்சர்கெஹெலிய ரம்புக்வெலவினால் சுகாதார அமைச்சுக்கு மேற்கொள்ளப்பட்ட முறைகேடான நியமனங்கள் ஊடாக அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், ☞6

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு மக்களாணையை மீறும் செயல்

## எதிர்க் கட்சித் தலைவர் கண்டனம்

**நள்ளிரவு முதல் மின்சாரக் கட்டணத்தை 15% ஆல் அதிகரிக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை மின்சார சபையும், ஆளும்தரப்பும் முன்வைத்த முன்மொழிவின் அடிப்படையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது. இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பு மக்கள் ஆணையை மீறும் செயலாகும். மக்களின் குரலுக்கு செவிசாய்க்காதபோக்காகும்.இதுஇந்நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.**

**ஜனாதிபதி தேர்தலின் போது, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மின்சாரக் கட்டணத்தைரூ.9000இல்இருந்துரூ.6000 ஆகவும், ரூ.3000 கட்டணத்தை ரூ.2000 ஆகவும் குறைப்போம் என்றார். மின்சார கட்டணத்தை 33% ஆல் குறைப்போம் என்றும்மேடைக்குமேடைபிரஸ்தாபித்தார். பின்னர், பொதுத் தேர்தலில் அக்கட்சி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை ஈட்டி 159 ஆசனங்களை தனதாக்கிய சந்தர்ப்பத்திலும்கூடமின்சாரக்கட்டணத்தை 33% ஆல் குறைத்திருக்க வேண்டும்.** ☞2

தேசபந்துவிற்கு எதிரான விசாரணை:

# அதிகாரி சொன்னதால் சுட்டோம் முக்கிய சாட்சி நேற்று வாக்குமூலம்

வெலிகம (ரி15) ஹோட்டலில் துப்பாக்கிச் சூடுநடத்துவதற்காகதான்உள்ளிட்ட குழுவுக்கு அப்போதைய கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வாவே உத்தரவிட்டதாக அந்த பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அன்ஸ்லம் டி சில்வா நேற்று தெரிவித்தார்.

பணிநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பணிநீக்கம்செய்யப்பட்டபொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னகோன், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவின் முன் இன்று நான்காவது நாளாக முன்னிலையானார்.

அப்போது, 24ஆவது சாட்சியாகப் பெயரிடப்பட்ட, தற்போது இடைநீக்கம் செய்யப்பட்ட, கொழும்பு குற்றப்பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி பிரதான ☞6

# மின் கட்டணம் 15 வீதம் உயர்வு

இன்று முதல் அமுலுக்குவரும் வகையில், 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் மின்சாரக் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக நூற்றுக்கு 15 வீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஊடக பேச்சாளர் ஜயனாத் ஹேரத் தெரிவித்தார்.

மின் கட்டண திருத்தம் தொடர்பாக நேற்று கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

மின்கட்டணதிருத்தம்தொடர்பானயோசனையை மின்சார சபை கடந்த மே மாதம் 16ஆம் திகதி எமக்கு சமர்ப்பித்திருந்தது. அதன் பிரகாரம் கடந்த 27ஆம் திகதி முதல் இதுதொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கையை நாங்கள் ஆரம்பித்திருந்தோம். 9 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் பொது மக்களின் கருத்துக்களைபெற்றுக்கொண்டோம். அதன் பிரகாரம், பொது மக்களின் கருத்துக்கள், மின்சாரசபையின் செலவுகள், நாட்டின் அன்றாட ☞2

# நீதிமன்றுக்கு நேரில் வந்திருந்த தவறாக விடுவிக்கப்பட்ட கைதி

## அ'புரம் சிறை அதிகாரியின் மறியல் நீடிப்பு

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அதுல திலகரத்ன என்பவர் சட்டவிரோதமாகஜனாதிபதிபொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரி மொஹான்கருணாரத்னவின்விளக்கமறியல் காலம் ஜூன் 13 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ☞6

# தவறாக விடுவிக்கப்பட்ட கைதி தப்பியோடிவிட்டார்

## மற்றொரு நீதிமன்றில் நேற்று தெரிவிப்பு

ஜனாதிபதி பொது மன்னிப்பை முறைகேடாக பயன்படுத்தி விடுவிக்கப்பட்ட அத்துல திலக்கரத்ன என்ற நபர் தற்போது அந்தப் பிரதேசத்தில் இருந்து தப்பிச்சென்றுள்ளார் என்று தெரியவருவதுடன் அடுத்த வழக்கு விசாரணையின்போது நிதிமன்றம் மற்றும்முழுநாடும்ஆச்சரியமடையும்விடயங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக ☞6

பொதுமன்னிப்பில் கைதி தவறாக விடுவிப்பு

# "நேர்மையில் ஏற்பட்டுள்ள தோல்வி" சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

அண்மையில் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்துகைதியொருவர் விடுவிக்கப்பட்ட சம்பவமானது அதனுடன் தொடர்புடைய கட்டமைப்பின் நேர்மைத்தன்மை தோல்வியடைந்திருப்பதைக் காண்பிப்பதுடன், எதிர்வருங் காலங்களிலும் இவ்வாறு உரிய செயன்முறைகள் பின்பற்றப்படாமல் இருக்கக்கூடும் என்ற கரிசனையைத் தோற்றுவித்திருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ☞6

# சிறை அதிகாரிகள் கைதுக்கு பொது ஜன பெரமுன கண்டனம்

நாட்டின்தேசியபாதுகாப்புதொடர்பில்நடவடிக்கை எடுத்துவரும் நிறுவனங்களின் பிரதானிகளின் பணி இடை நிறுத்தி கைது செய்துள்ளமை பொருத்தம் இல்லை. ஆளும்தரப்பு இவ்வாறு செயற்பட்டு வடகொரியாவில் போன்று நாட்டை நிர்வகிக்கப்போகின்றதாக என்ற சந்தேகம் எழுகிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமன கட்சியின் பொதுச் செயலாளர் சாகல காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்துவரும் பிரதான மூன்று நிறுவனங்களின் பிரதானிகளான இலங்கை ☞6

நல்லூர் பிரதேச சபையில் ஆட்சியமைக்க

# தமிழ் அரசு – மக்கள் கூட்டணி நேற்று ஒப்பந்தம் கைச்சாத்து

நல்லூர் பிரதேச சபையை தமிழ் மக்கள் கூட்டணியும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் இணைந்து ஆட்சி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்றைய தினம் இரு கட்சிகளினதும் பிரதிநிதிகள் கைச்சாத்திட்டுள்ளனர்.

வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களில் தமக்குப் பெரும்பான்மை கிட்டாத சபைகளில் இணைந்துஆட்சியமைப்பதுதொடர்பில் தமிழ்க்கட்சிகள் ஒன்றுடன் ஒன்று ☞3

# சட்டவிரோத மீன்பிடி சாதானங்கள் சிக்கின

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 20 டிங்கி படகுகள் மற்றும் 76 நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மே 26 முதல் ஜூன் 7 வரையான காலப்பகுதியில்கடற்பகுதிகளில்மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணம், ☞3

## இனி இது .....

உள்ளாட்சி சபைத் தேர்தலுக்கு முன்பாக யாழ். மாநகர சபையில் தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டபோது, அதன் ஆதரவை தமிழ் அரசுக் கட்சிக்கு வழுங்குவதாக மணிவண்ணனும் சுமந்திரனும் ஒரு இணக்கத்திற்கு வந்தனர். ஆனால், விக்னேஸ்வரன் அப்போது அதற்கு எதிராக இருந்தார். யாழ். மாநகர சபையிலும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அப்பொழுது இரு தரப்புக்களும் இணங்கி வந்திருந்தன.

ஆனால், அதில் கூறப்பட்டிருந்தபடி தமிழ் அரசுக்கு ஆதரவு என்ற அறிவிப்பையோ, தமிழ் அரசுக்கு ஆதரவான பரப்புரையையோ தமிழ் மக்கள் கூட்டணி வாக்களிப்புக்கு இரண்டு நாள்கள் முன்னர் வரையிலும் முன்னெடுக்கவேயில்லை. இருந்தாலும் ஒப்பந்தத்தில்கையெழுத்துவைக்கும்படிகேட்டு மணிவண்ணன் சுமந்திரனிடம் வந்தபோது இந்த விவகாரத்தைச் சுட்டிக்காட்டி அவரைத் திருப்பி அனுப்பிவிட்டிருந்தார் சுமந்திரன்.

அப்படி அந்த ஒப்பந்தத்தைத் தாமதித்து யாழ். மாநகர சபையில் தமிழ் அரசுக்குத் தமது ஆதரவு உண்டு என்று சொல்லத் தயங்கிய விக்னேஸ்வரன்தான் இப்போது நல்லூரில் முதல் இரண்டு வருடங்கள் ஆட்சி தமக்குக் கிடைக்கிறது என்பதனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். தமிழ் அரசுக் கட்சிக்கும் நல்லூரில் மட்டுமல்லாமல் ஏனைய சபைகளிலும் தமிழ் மக்கள் கூட்டணியிடம் இருக்கும் ஓரிரு உறுப்பினர்களின் மீதே கண் என்பதால் அதுவும் ஒப்பந்தத்திற்குள் நுழைந்துள்ளது.

இருப்பினும் இந்த ஒப்பந்தம் நல்லூரை மட்டுமே கட்டுப்படுத்தும் என்றும் மற்றைய சபைகளில் ஏதாவது ஏற்பாடுகள் இருப்பின் அதற்கான ஒப்பந்தம் தனியாகச் செய்யப்படவேண்டும் என்றும் அந்த ஒப்பந்தத்தில் ஒரு வாசகம் உண்டு. தனது மாணவனைப் பற்றிய அறிந்திருக்கும் காரணத்தினால்எந்தஒப்பந்தமாகஇருந்தாலும் விக்னேஸ்;வரன் இந்தவொரு வாசகத்தை அதில் சேர்த்து விட்டுவிடுகிறார். சுமந்திரன் தேர்தல்களில் வெற்றிபெற்றுவிடக்கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த, அவரை அரசியலைவிட்டே துரத்தவேண்டும் என்று விரும்பிய விக்னேஸ்வரன் நேற்று சிரித்தபடியே அவருடன் ஒப்பந்தத்தைப் பகிர்ந்துகொண்டார். இதைத்தான் அரசியலில் நிரந்த எதிரியும் இல்லை நிரந்தரப் பகைவரும் இல்லை என்று சொல்வார்கள் போலும். இது தொடர்பில், தனது சிரிப்புக்கு விளக்கமளித்து நீதியரசரிடம் இருந்து கேள்வி பதில் வடிவில் ஒரு நீண்ட விளக்கம் நாளை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகிய இருசபைகளிலும் அகில இலஙகை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட இருவரை பதவி நீக்கும்படி கேட்டு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தனித் தனியாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இரு வழக்குகளும் இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

இரு வக்குகளிலும் சைக்கிள் கட்சி உறுப்பினர்கள் பதவியேற்பதற்கு எதிராக இடைக்காலத்தடை உத்தரவு கேட்கப்பட்டுள்ளது. இன்றைய முதற்கட்ட ஆய்விலேயே தமது பிராது தொடர்பில் வழக்காளிகள் நீதிமன்றம் திருப்தியடையும்வகையில்சான்றாதாரங்களை முன்வைத்தால் இடைக்காலத்தடை கிடைக்கக் கூடும். ஏற்கனவே யாழ். மாநகர சபையில் மணிவண்ணனுக்கு எதிராகவும் இவ்வாறான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு இடைக்காலத் தடை உத்தரவு பெறப்பட்டது. அதன் மூலம் மாநகர சபை உறுப்பினராக மணிவண்ணன் செயற்படமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டது.

உள்ளூராட்சி சபைகள் சட்டப்படி அதனது உறுப்பினர் ஒருவர் அந்தச் சபையின் எல்லைக்குள் நிரந்தர வசிப்பாளராக இருக்கவேண்டும் அல்லது சபை எல்லைக்குள் வர்த்தகம் போன்ற ஏதாவது நிரந்தர தொழில் நடவடிக்கைகளில் அல்லது செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவேண்டும். சாவகச்சேரியில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட இரு உறுப்பினர்களும் அவரவர் சபைகளின் எல்லைக்குள் வசிப்பவர்களோ தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களோ அல்லர் என்பதே முறைப்பாடு.

நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தால் இரு சபைகளிலும் சைக்கிளின் பலம் ஒவ்வொன்றால் குறையும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மின்சாரக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அது நடக்கவில்லை. நாட்டுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அப்பட்டமாக மீறி, ஜனாதிபதியே தான் வெளியிட்ட அறிக்கைகளை பொய்களாக மாற்றும் வகையில், மின்சாரக் கட்டணத்தை 15% ஆல் அதிகரிக்க தற்போது இந்த ஆளும்தரப்பு எடுத்த நடவடிக்கை, இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாக அமைந்து காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக இன்று (11) விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) அடுத்த கட்ட தவணையைப் பெறுவதற்காக மின்சாரக் கட்டணங்கள் இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளன. நீட்டிக்கப்பட்ட கடன் வசதியை பெறவேண்டுமானால் மின்சாரகட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

திசைகாட்டி தலைமையிலான ஜே.வி.பி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய சர்வதேசநாணயநிதிய ஒப்பந்தமொன்றையும் இணக்கப்பாடொன்றையும் எட்டுவோம் என வாக்குறுதியளித்திருந்தது. என்றாலும் ஆட்சிக்கு வந்தவுடன் தனது ஆணையை மீறியுள்ளதுடன், முந்தைய ஆளும்தரப்பின் சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை அவ்வாறே முன்கொண்டு செல்கிறது. இந்த ஆளும்தரப்பு மக்கள் ஆணையை மீறி செயல்பட்டு வருகிறது. மக்கள் ஆணையைகாட்டிக்கொடுத்து பொதுமக்களின் கருத்தை கிடப்பில் போட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பின் இணக்கப்பாட்டை இவர்கள் அதே முறையில் செயல்படுத்தியதன் விளைவாக, நாடும் மக்களும் இன்று இவ்வாறான நிலைமைகளுக்கு ஆளாகியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் கூட சர்வதேச நாணய நிதியத்துடன் இனங்கி செயல்படும். என்றாலும் ஹனிய் பிரதிநிதிகளை சந்தித்தபோது நாம் புதியதொரு இணக்கப்பாட்டுக்கு வருவோம் என தெரிவித்திருந்தோம். ஐக்கியமக்கள்சக்தி (SJB) இன்றும் அந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. தற்போதைய ஆளும்தரப்பு பொதுமக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் பொய்யாக்கி, மின்சார கட்டணத்தை 15% ஆல் அதிகரித்துள்ளது. ஆளும்தரப்பு எடுத்துள்ள இந்த நடவடிக்கையால் ஏழைகள், சாதாரண மக்கள், உழைக்கும் மக்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டு வருவோரை கடுமையான சிக்கலுக்குள் தள்ளும். எனவே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றி, வழங்கப்பட்ட மக்கள் ஆணையை காட்டிக் கொடுக்க இடமளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம்.

மின்சாரக்கட்டணத்தை 15% அதிகரிப்பதற்கு பகரமாக மின்சாரக் கட்டணத்தை 33% ஆல் குறைக்கும் நடவடிக்கையையே இந்த ஆளும்தரப்பு எடுத்திருக்கவேண்டும். வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரை மின்சார நுகர்வோருடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தி குரல் எழுப்பும். ஐக்கிய மக்கள் சக்தி ஜனநாயக ரீதியிலான போராட்டத்திலும் ஈடுபடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.







காலைக்கதிர் Kalaikkathir

## மின் கட்டணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் மற்றும் பொதுவான ஒழுங்குமுறைகளை கருத்திற்கொண்டு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார கட்டணத்தை ஒட்டுமொத்தமாக நூற்றுக்கு 15 வீதத்தால் இன்று முதல் அமுலுக்கு வரும்வகையில் அதிகரிப்பதற்கு தீர்மானித்திக்கிறோம்.

இந்த மின்சார கட்டண அதிகரிப்பை 2024 மின் கட்டணத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில், தற்போது நூற்றுக்கு 15 வீதத்தால்அதிகரித்தாலும்எமதுமின்கட்டணம் நூற்றுக்கு8வீதத்துக்குகீழ்இருந்துவருகிறது. அனைத்துதரப்பினரையும்கருத்திற்கொண்டு எமது ஆணைக்குழு எடுத்திருக்கும் இந்த தீர்மானம் மிகவும் நியாயமானது என்றே நாங்கள் நினைக்கிறோம்.

அதன் பிரகாரம் சிறிய நுகர்வு, அதாவது 90 அலகுகளுக்கு குறைவான மதத் தலங்களுக்கான மின்சாரக் கட்டணத் திருத்தத்தில் இந்த முறை எந்த மாற்றமும் இல்லை. 30 அலகுகளுக்கு குறைவான வீட்டு பிரிவிற்கு 8 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதன்படி.75 ரூபாவாக இருந்த மாதாந்த கட்டணம் இன்று முதல் 80 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

30முதல்60அலகுபிரிவின்ஒருஅலகுக்கு இதுவரை இருந்த விலை 2 ரூபாவால் அதிகரித்துள்ளதுடன், அதன் ஒரு அலகின் புதிய விலை 8 ருபா ஆகும். அதன்படி, அந்த பிரிவின் மாதாந்த கட்டணம் 10 ரூபாவால் அதிகரித்து 210ரூபா ஆக மாறியுள்ளது.

இதற்கிடையில், 61 முதல் 90 அலகுகளுக்கான மொத்த கட்டண அதிகரிப்பு 240 ரூபாவாக வரையறுக்கப்பட்டுள்ளது. 91 முதல்120 அலகுகளுக்கான மொத்த கட்டண அதிகரிப்பு 360 ரூபாவாகும்.

121 முதல் 150 அலகுகளுக்கான மொத்த கட்டண அதிகரிப்பு 600 ரூபாவாகவும் 121 முதல் 180 அலகுகளுக்கான மொத்த கட்டண அதிகரிப்பு 840 ரூபாவாகவும், 180 அலகுகளுக்கு மேல் உள்ள பிரிவிற்கு 2020 ரூபாவாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வீட்டு பிரிவில் மின்சாரக் கட்டணத் திருத்தம் 20 ரூபாவிலிருந்து .2020 ரூபா வரை அதிகரித்துள்ளது.

180அலகுகளுக்குமேல்உள்ளவழிபாட்டுத் தலங்களுக்கான மாதாந்த நிலையான கட்டணங்களில் எந்த அதிகரிப்பும் இருக்காது என்பதுடன், அலகுகளுக்கான கட்டணம் மட்டுமே அதிகரிக்கும். தொழில் துறைகளுக்கு கடந்த வருடத்துக்கு ஏற்புடையதாக மின் கட்டணம் 300 அலகுகளுக்கு அதிகரிக்கும்போதுஒருஅலகுக்கானகட்டணம் 4 ரூபாவாலும் மாதாந்த கட்டணம் 50 ரூபாவாலும் அதிகரிக்கப்படும்.

பெரிய தொழிற்சாலைகள், ஹோட்டல்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் . 5,000 ரூபா அப்படியே காணப்படுவதுடன், மாதாந்த விண்ணப்பக் கட்டணம் மட்டும் 100 ரூபா அதிகரிக்கும்.

அதன்படி, மேற்கண்ட பிரிவில் .23ரூபாவாக நிலவிய ஒரு அலகு கட்டணம் .28 ரூபாவாகவும், 13ரூபாவாக நிலவிய ஒரு அலகின் கட்டணம் 15 ரூபாவாகவும் 11 ரூபாவாக நிலவிய ஒரு அலகு கட்டணம் 12ரூபாவாகவும் அதிகரிக்கும்.

அதன்படி, கட்டண அதிகரிப்பு 50 சதம் முதல் .9ரூபா வரை அதிகரித்து, மாதாந்த வீத அதிகரிப்பு 50ரூபா முதல் 100ரூபா வரை அதிகரித்துள்ளது என்றார்

## சட்டவிரோத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைக்காடு, புதுமாத்தளன், திருகோணமலை, கல்லடிச்சேனை, கோகிலாய், சேப்பல் தீவு, கொட்பே, பொடுவகட்டு, குச்சவெளி, மட்டக்களப்பு ஆகிய கடற்பரப்புகளை உள்ளடக்கியவடக்குமற்றும்கிழக்குகடற்படை கட்டளைகளால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தியமை, மின்சார விளக்குகளைப் பயன்படுத்தி இரவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட மேலும் சில குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக குறித்த சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் 20 டிங்கி படகுகளையும் 17 தடைசெய்யப்பட்ட மீன்பிடிவலைகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப் பட்ட சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம், திருகோணமலை,ஈச்சலம்பற்று,முல்லைத்தீவு, குச்சவெளி, கொட்பே மற்றும் மட்டக்களப்பு ஆகியஇடங்களில்உள்ளகடற்றொழில்மற்றும் நீரியல் வள திணைக்கள அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ் அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்தி வருகின்றன.

அதன்படி நல்லூர் பிரதேச சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 7 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி 6 ஆசனங்களையும் பெற்றிருக்கும் நிலையில், அச்சபையில்அவ்விருகட்சிகளும்இணைந்து ஆட்சியமைப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நேற்று புதன்கிழமை கொழும்பிலுள்ள சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் வைத்து தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரனும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் சுமந்திரனும் மேற்படி இணக்கப்பாடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இதன்போது தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர் சிற்பரனும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் நல்லூர் பிரதேச சபையில் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி என்பன இணைந்து ஆட்சியமைக்கவிருப்பதுடன் அதற்கமைய முதல் இரண்டு வருடங்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுவதற்கும், அக்காலப்பகுதியில் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் உப தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதேபோன்று அடுத்த இரண்டு வருடங்களுக்கு (3ஆம், 4 ஆம் ஆண்டுகள்) தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுவதற்கும், தமிழ்மக்கள்கூட்டணியின்உறுப்பினர்ஒருவர் உபதவிசாளராகத்தெரிவுசெய்யப்படுவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

மேலும் ‘இந்த உடன்படிக்கை நல்லூர் பிரதேச சபை நிர்வாகத்தை மாத்திரமே கட்டுப்படுத்தும். வேறு பிரதேச சபைகளில் உடன்பாடு எட்டப்படின், அதற்கு வேறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும்‘ எனவும் அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இதுபற்றிக் கருத்து வெளியிட்ட சுமந்திரன், உள்ளூராட்சிமன்றங்களின் ஊடாக மக்களுக்கான சேவை உரிய வாறு சென்றுசேரவேண்டும் எனவும், அதனை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே தாம் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறாத சபைகளில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி இணைந்து ஆட்சியமைப்பதற்கான உடன்பாட்டை எட்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

அதன் நீட்சியாகவே தற்போது தமிழ் மக்கள் கூட்டணியுடனும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும், மாகாணசபைத் தேர்தல்உள்ளடங்கலாகஎதிர்வருங்காலங்களில் இணைந்து பயணிப்பது குறித்து அந்தந்தச் சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி காரைநகர் பிரதேச சபையில் தமிழ் மக்கள் கூட்டணி தம்மை விட அதிக ஆசனங்களைப் பெற்றிருப்பதாகவும், எனவே அங்கு அவர்கள் ஆட்சியமைப்பதற்கு அவசியமான ஆதரவை வழங்குவதற்குத் தாம் தயாராக இருக்கின்றனர் எனவும் தெரிவித்த சுமந்திரன், அதேபோன்று நல்லூர் பிரதேச சபைக்கு அப்பால் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாத ஏனைய சபைகளிலும் தமிழ் மக்கள் கூட்டணி தமக்கு ஆதரவு வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மின்சாரக் கட்டண உயர்வு; வாக்குறுதியை மீறிய மக்கள் விரோதச் செயல்

இலங்கையின் மக்கள் பல்வேறு பொருளாதார சிக்கல்களால் ஏற்கனவே பாடுபட்டு வரும் நிலையில், மின்சாரக் கட்டணம் மேலும் 15 வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளதை அறிவித்தது நேற்று மக்கள் மனங்களில் பெரும் உளைச்சலை ஏற்படுத்தியது. அரசு கடந்த காலங்களில் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் மீறி, இவ்வாறு கட்டணங்களை அதிகரித்திருப்பது முற்றிலும் நீதிக்குப் புறம்பான செயல் என மக்கள் கருதுகின்றனர்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கமாட்டோம் என்று ஆட்சிக் கட்சி கடந்த தேர்தலில் மக்களிடம் பலமுறை உறுதியளித்தது. கடுமையான வாழ்வச் செலவுகள், வேலைவாய்ப்பின்மையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலவும் துயரங்களை இன்னும் அதிகரிக்கும் விதமாக இவ்வுயர்வு செயல்படக்கூடியதாக உள்ளது. எரிபொருள் விலை உயர்வுகள், அத்தியாவசிய பொருட்களின் விலைகூட்டல், வரிகட்டணங்களின் சுமை ஆகியவையால் சீர்குலைந்த குடும்பங்களின் பொருளாதாரம், இவ்விதமான மின்சாரக் கட்டண உயர்வால் மேலும் கடுமையாகப் பாதிக்கப்படும்.

அரசின் விளக்கம் என்னவெனில், இந்த இலங்கை மின்சார சபையின் உயர் இழப்புகளை ஈடு செய்யவேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும். ஆனால், இந்த இழப்புகளுக்கு காரணமாக இருந்தது நீண்டகாலக் களவுகள் (decades of corruption) தவறான நிர்வாகம், திட்டமின்றி மேற்கொண்ட முதலீடுகள் என்பவை என்பதை மறந்துவிட முடியாது. இழப்புகளுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாமல், அவர்களின் தவறுகளுக்கான சுமையை மக்கள் ஏற்க வேண்டுமா என்பது கேள்விக்குரியது.

மின்சார கட்டணத்தை உயர்த்துவதற்கு பதிலாக, அரசு எரிசக்தி உற்பத்தியில் செலவைக் குறைக்கும் வழிகளை தீவிரமாகப் பின்பற்ற வேண்டியது அவசியமாக இருந்தது. சூரிய சக்தி, காற்றுச் சக்தி போன்ற மாற்றுச் சக்தி மூலங்களின் உற்பத்தியை விரைந்து விருத்தி செய்திருக்கலாம். ஆனால், இது குறித்த திட்டங்கள் நடைமுறையில் செல்லாமல், எளிதாக வருவாய் ஈட்டும் வழியாக மக்கள் மீதே இழப்பை சுமத்துவது தற்போதைய அரசின் பழக்கமான நடைமுறையாக மாறியுள்ளது.

மின்சார கட்டண உயர்வால் சிறு தொழில்கள், கடைகள், நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை அதிக சுமைக்கு ஆளாகின்றன. ஏற்கனவே நஷ்டம் கண்டு வரும் இந்தத் துறைகள் இன்னும் பாதிக்கப்படுவதைப் புறக்கணிக்க முடியாது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இவை தூண் போன்றவை என்பதும் நினைவில் கொள்ளப்படவேண்டும்.

எனவே, ஆளும்தரப்பு மக்களின் உணர்வுகளை மதித்து, உடனடியாக இந்த 15 வீத மின்சாரக் கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும். அதேபோல், நிதி பிரச்சினைகளுக்கு நீடித்த தீர்வுகளை உருவாக்க, முழுமையான நிதி மேலாண்மை சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். மின்சார சபையின் ஊழல், பிழைகள் குறித்து விசாரணை நடத்தி, கடமைகூராத அதிகாரிகளை கணக்குக்கு கொண்டு வர வேண்டும். இது போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தால், அரசின் மீதான நம்பிக்கை முற்றிலும் நிலைநாட்ட முடியாததாக மாறும்.

முடிவில், ஒரு நாட்டின் ஆட்சியின் நிலைமை அதன் மக்கள் நலன் குறித்த அணுகுமுறையால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை அரசு மறக்கக்கூடாது. மக்கள் எதிர்ப்பை ஒடுக்கும் நடவடிக்கைகளை விட, அவர்களின் சுமைகளை குறைக்கும் தீர்வுகளை நாடுவது அரசின் கடமை.

## திருவுடை மகவாய் சீர்காழி பிறந்தார்!



மூன்றாம் வயதில் முகிழ்த்த
நல்ஞானம்
முந்து தமிழில் தத்துவம் ஆனது
திருவுடை மகவாய் திருவருள்
நிறைய
சீர்காழி தலத்தில் சம்பந்தர்
பிறந்தார்

தமிழாய் மலர்ந்தார் தமிழாய்
வளர்ந்தார்
தமிழாய் இறையைக் கண்டார்
அவரும்
அவரின் தமிழோ அமுதம் ஆனது
ஆண்டவன் சன்னதி அர்ச்சனை ஆனது

நம்பிடும் அடியார் நம்பிக்கை வளர
நல்வழி காட்டிய மந்தரம் ஆனது
சந்ததம் இறையை சிந்தையில் இருத்த
செந்தமிழ் பாட்டாய் செப்பினார் அவரும்

சுந்தரத் தமிழும் சுவையொடு வந்தது
அந்தமும் இல்லான் ஆதியும் இல்லான்
செந்திரு சம்பந்தர் சொற்களில் கலந்தார்
நந்தமிழ் செழித்தது நல்வழி தெரிந்தது



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா




புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## நேர்மையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

2025 வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அத்துல திலகரத்ன என்பவர் விடுவிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் கடுமையான முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து, அது குறித்து குற்றவிசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்விசாரணைகளில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்படாத கைதிகள், பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாகப் பொய்யாகக்கூறி விடுவிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய மற்றும் செயலாளர் சத்துர கல்ஹென ஆகியோரால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவர் முறையான சட்ட செயன்முறைகள் பின்பற்றப்படாமல், ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் குறித்து எமது தீவிர கரிசனையை வெளிப்படுத்துகின்றோம்.

அரசியலமைப்பின் 34 ஆம் பிரிவு தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு அதிகாரமளிக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இருப்பினும் அந்த அதிகாரம் வெளிப்படைத்தன்மைவாய்ந்த முறையிலும், உரியவாறான செயன்முறைகளின் பிரகாரமும், சட்டத்துக்கு அமைவாகவும் பயன்படுத்தப்படவேண்டும்.

ஹிருணிகா பிரேமசந்திர எதிர் சட்டமா அதிபர் வழக்கில் உரிய செயன்முறைகள் மீறப்படும் பட்சத்தில் பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் நீதிமன்ற மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய சம்பவமானது அரச கட்டமைப்புக்கள் முறையாக இயங்காதிருப்பதற்கான சாத்தியப்பாடு, நிர்வாக அதிகாரத்துஷ்பிரயோகம், சிறைச்சாலைக் கட்டமைப்பின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மீறப்படல் என்பன தொடர்பில் பல்வேறு கேள்விகளைத் தோற்றுவித்துள்ளது. ஜனாதிபதி ஊடக மையத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில், ஜனாதிபதியினால் அத்தகைய தொரு பொதுமன்னிப்பு உத்தியோகபூர்வமாக வழங்கப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது உரிய கட்டமைப்பின் செயன்முறைசார் நேர்மைத்தன்மையின் தோல்வியைக் காண்பிப்பதுடன், எதிர்வருங்காலங்களில் உரிய செயன்முறை பின்பற்றப்படாமல் இருக்கக்கூடும் எனும் அச்சுறுத்தலையும் தோற்றுவித்துள்ளது.

எந்தவொரு விதிவிலக்குமின்றி சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்படவேண்டும். அதேபோன்று பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளையும், நீதிமன்றத்தீர்ப்பையும் அவமதிக்கக்கூடியவாறு சட்டத்துக்கு முரணாகவும், தன்னிச்சையான விதத்திலும் சிறைக்கைதிகள் விடுதலைசெய்யப்படக்கூடாது.

எனவே இச்சம்பவம் தொடர்பில் முழுமையானதும், பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினரைக் கண்டறிந்து அவர்களை சட்டத்தின்முன் நிறுத்துவதற்குமான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுங்கள். அத்தோடு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பொறுப்புவாய்ந்ததும், வெளிப்படைத்தன்மையுடன்கூடியதுமான செயற்பாடுகளை வலுப்படுத்துங்கள் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## தவறாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புடன் தெரிவித்துக்கொள்வதாக மேலதிக சொலிசிட்ட ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸ் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதி பொதுமன்னிப்பை முறைகேடாக பயன்படுத்தி வேறு சிறைக் கைதிகளை விடுதலை செய்துள்ளமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மீண்டும் இடம்பெற்றபோது, குற்றப்புலனாய்வு விசாரணை திணைக்களத்துக்கு பதிலாக முறைப்பாட்டை முன்லைப்படுத்தி தெரிவிக்கையிலேயே மேலதிக சொலிசிட்ட ஜெனரால் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், சர்ச்சைக்குரிய சிறைத்தண்டனை அனுபவித்துவந்த நபர் தப்பிச்சென்றுள்ளதால், இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொண்டுவரும் விசாரணை முடிவடையவில்லை. அத்துடன் இந்த சம்பவம் வெறுமனே திடீரென இடம்பெற்ற சம்பவம் ஒன்று அல்ல. பல வருடங்களாக கூட்டாக மேற்கொள்ளப்பட்டுள்ள மோசடி செயலாகும். அதனால் இதுதொடர்பான விசாரணைகளை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முடியாது.

இலங்கையில் இதுபோன்ற குற்றவாளிகள் மிகவும் நுட்பமானவர்கள் என்றும், உயர் பதவிகளில் உள்ள நபர்கள் வேறு எவரையும்விட நுட்பமானவர்கள் என்பதால் விசாரணை நடவடிக்கைகளுக்காக மேலும் இரண்டுவாரங்கள் தேவையாகும். அதேநேரம் அடுத்த வழக்கு விசாரணையின்போது நீதிமன்றம் அதிர்ச்சிக்குள்ளாகும் பல தகவல்களை வெளிப்படுத்துவேன் என்பதை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

ஜனாதிபதி சட்டத்தரணி நலிந்த இந்ததிஸ்ஸ, சந்தேகநபரான சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவுக்காக மீண்டும் பிணை கோரியபோது அதனை நிராகரித்த பிரதான நீதிவான், ஜூன் 25 வரை தொடர்ந்தும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடடார்.

## அதிகாரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் பரிசோதகர் அன்ஸ்லம் டி சில்வாவிடம் குழு விசாரணைகளை மேற்கொண்ட போது, ஹரக் கட்டா என்றும் அழைக்கப்படும் நடுன் சிந்தக தொடர்பில் விசாரணை நடத்த உத்தரவு வந்ததா என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

அதற்கு பதிலளிக்கும் விதமாக, அன்ஸ்லம் டி சில்வா பின்வருமாறு கூறினார்.

'டிசம்பர் 30, 2023 அன்று, அப்போதைய கொழும்பு குற்றப் பிரிவின் பதில் பணிப்பாளர் நெவில் டி சில்வா, அதிகாரிகள் குழுவுடன் வெலிகமவுக்கு வந்து செல்லுமாறு என்னைக் கேட்டார். பாதாள உலகத்துடன் தொடர்புடைய ஒரு குழுவிற்கு அங்குள்ள ஒரு ஹோட்டலில் ஒருவிருந்து இருப்பதாகவும், அந்த இடத்திற்குச் சென்று சுவரிலும் ஹோட்டலின் பெயர் பொறிக்கப்பட்ட பலகையிலும் சுட வேண்டும் என்றும் கூறினார். அந்த நோக்கத்திற்காக வெளியே சென்ற குழுவின் தலைவராக நான் செயற்பட்டேன்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகு, நாங்கள் கொஞ்சம் முன்னோக்கி நகர்ந்தோம். நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது, மற்றொரு துப்பாக்கிச்சத்தம் கேட்டது. பின்னர் எங்களுடன் வந்த உபுல் என்ற அதிகாரி துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி வீழ்ந்துக் கிடந்தார். என்னுடன் இருந்தவர்களிடம் 'சீக்கிரம் புறப்படுங்கள்' என்று சொன்னேன். அங்கு ஒரு பேருந்தில் சுமார் 20 விசேட அதிரடிப் படையினர் இருந்தனர். அவர்களின் பேருந்து தாமதமாக புறப்பட்டதால் நாங்கள் இன்று உயிருடன் இருக்கிறோம். இல்லையெனில், உபுலுடன் சேர்ந்து நாங்களும் இறந்திருப்போம்.

நெவில் டி சில்வா, எங்களிடம் பொய் சொன்னார். வெலிகம பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்துவிட்டே நாங்கள் துப்பாக்கிச் சூடு நடத்தப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் எங்களிடம் குறிப்பிட்டார்.' என்றார்.

'தேசபந்து இதைப் பற்றி உங்களிடம் கேட்டாரா?' என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கேட்டார்.

'இல்லை,' என்று அன்செல்ம் டி சில்வா பதிலளித்தார். பின்னர், மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், உடற்கூறாய்வு நடத்திய சந்தர்ப்பத்தில் அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடத்திய ஆரம்பகட்ட விசாரணையின்போது, மூன்றாம் தரப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் குறிப்பிட்டீர்கள். இந்தக் கதையை உருவாக்கியது யார்? என்று கேட்டார்.

'சம்பவத்திற்குப் பிறகு, நெவில் டி சில்வா வெலிகமவுக்கு வந்தார். இதுபோன்ற ஒரு கதையைச் சொன்னால், எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று அவர் கூறினார். அதன்படி, இந்தக் கதையை நாங்கள் நீதிமன்றத்திற்குச் சொல்வோம் என்ற கூட்டு நிலைப்பாட்டிற்கு வந்தோம். எனவே, நாங்கள் அந்தக் கதையை அப்படியே சொன்னோம். இறப்பு விசாரணையின் போதும், நீதிவான் நீதிமன்றத்திலும், முதல் முறையாக வாக்குமூலம் அளிக்கும்போது, நாங்கள் ஒரு ஜோடிக்கப்பட்ட கதையைச் சொன்னோம். இந்தப் பிரச்சினை தொடரும் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். பின்னர் நான் குற்றவியல் விசாரணைக்குச் சென்று உண்மைக் கதையைச் சொன்னேன்.' என்று அன்செல்ம் டி சில்வா குறிப்பிட்டார்.

பணிநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் சார்பாக ஆஜரான சட்டத்தரணி எஸ். வீரவிக்ரம, சாட்சியிடம் விசாரணை நடத்தத் தொடங்கினார். வெலிகமவில் உள்ள நி 15 ஹோட்டலில் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோதுகூட, ஒரு பொலிஸ் அதிகாரியாக, தண்டனைச் சட்டத்தின்படி, எந்தவொரு சொத்து மீதும் துப்பாக்கிச் சூடு நடத்த முடியாது என்பது உங்களுக்குத் தெரியாதா?

'நாங்கள் அதை அறிந்தே செய்தோம். நெவில் டி சில்வாவின் உத்தரவின் பேரில் இதை அறிந்தே செய்தோம்,' என்று அவர் பதிலளித்தார். 'சட்டவிரோத உத்தரவாக இருந்தும், அதை ஏன் பொலிஸ் வாக்குமூல அறிக்கையில் எழுதவில்லை?' என்று சட்டத்தரணி கேள்வி எழுப்பினார்.

மேலிடத்திலிருந்து வரும் அனைத்துத் தவறான உத்தரவுகளையும் நாம் நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால் நாம் பொலிஸ் உள்ளே இருந்தால், நமக்கு மேலே உள்ள அதிகாரிகள் சொல்வதைச் செய்யவேண்டும். இல்லையெனில், பொலிஸ் துறையில் நீடிக்க முடியாது. என்று சாட்சி பதிலளித்தார்.

இது குறித்து நெவில் சில்வாவுக்கு மேலே உள்ள அதிகாரிகளிடம் ஏன் இது குறித்து தெரிவிக்கப்படவில்லை என்று கேட்டபோது, சாட்சி, 'நான் அப்படிச் சொன்னாலும் எந்தப் பயனும் இருந்திருக்காது. அதனால்தான் நான் அப்படிச் சொல்லவில்லை' என்றார்.

உங்களுடன் சுடச் சென்ற எட்டு பேரில் ஒருவர் இறந்துவிட்டார். ஆறு பேர் மட்டுமே இங்கே இருக்கிறார்கள். மற்றவருக்கு என்ன ஆயிற்று? சட்டத்தரணியின் கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, அவர் கடந்த டிசம்பரில் வெளிநாடு சென்றார் என்று கூறினார்.

மேலும், அன்று வெலிகமவுக்குச் சென்றபோது ஏன் இரண்டு போலி எண் தகடுகளை எடுத்துச் சென்றீர்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த சாட்சி பின்வருமாறு கூறினார்.

நாங்கள் ஒரு பொலிஸ் வாகனத்தில் சென்றோம். அந்த வாகன உரிமத் தகடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே நாங்கள் இரண்டு போலி வாகன உரிமத் தகடுகளை எடுத்துச் சென்றோம்.

உயர் அதிகாரிகள் எங்களுக்கு அளித்த முடிவுகளால் நான் வேலையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளேன். இன்று எனக்கு ஓய்வூதியம்கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனைய அனைத்து அதிகாரிகளும் இதை ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்ளவேண்டும். இதுபோன்ற உத்தரவுகளை அமுல்படுத்துவதற்கு பதிலாக அவர்களை இடமாற்றம் செய்தால் நல்லது.

## நீதிமன்றுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, பிரதிவாதியான அதுல திலகரத்னவும் அந்தச் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் இருந்தார். அவர் தொடர்ந்த மற்றொரு வழக்கு முடிவுக்கு வந்த பிறகு இந்த வழக்கு விசாரணைக்கு வந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

சந்தேகநபரான சிறைச்சாலை அதிகாரி சார்பாக ஆஜரான மூத்த சட்டத்தரணி அரவிந்த ஹபக்கல, தனது கட்சிக்காரரான பிரதிவாதி அதுல திலகரத்ன சட்டப்பூர்வமாக விடுவிக்கப்பட்டார் என்று திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நேரத்தில் பிரதிவாதியான அதுல திலகரத்னவும் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி இருப்பதன் மூலம் இது மேலும் உறுதிப்படுத்தப்படுவதாக சட்டத்தரணி குறிப்பிட்டார்.

சட்டத்தரணி பேசிக்கொண்டிருக்கும்போது, பிரதிவாதியான அதுல திலகரத்ன, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளும் இருந்த திறந்த நீதிமன்ற அறையில் கையை உயர்த்தி, தான் நீதிமன்றத்தில் இருக்கிறார் என்று நீதவானிடம் தெரிவித்தார்.

பிரதிவாதியான அதுல திலகரத்னவின் சட்டத்தரணி சுரங்க மொஹோட்டி, தனது கட்சிக்காரர் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் தனக்கு எதிராக நிலுவையில் உள்ள கூஷிளீ/69/2018 வழக்கிலிருந்து சட்டப்பூர்வமாக விடுவிக்கப்பட்டதால் திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறார் எனவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இருப்பினும், பொது மன்னிப்பு அடிப்படையில் கைதிகளை விடுவிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் தெரிவித்தார்.

பிரதிவாதியின் சார்பில் ஆஜரான மூத்த சட்டத்தரணி அரவிந்த ஹபக்கல, வெசாக் பௌர்ணமி தினத்தன்று ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் பட்டியலில் அதுல திலகரத்னவின் பெயர் சேர்க்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில், சிறைச்சாலை அதிகாரியின் பிணை மனுவை நிராகரித்த நீதிமன்றம், எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

## சந்தேகநபரான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்டு, கொல்லப்பட்டிருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்வழக்குடன் தொடர்புபட்டதாக ஓய்வுபெற்ற பிரிகேடியர் ஷம்மி குமாரரத்ன உள்ளடங்கலாக 10 பேருக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்ற ட்ரயல் அட்பாரில் சட்டமா அதிபரினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்ட பலர் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவில் பணியாற்றியவர்களாவர்.

இந்நிலையில் இவ்வழக்கில் பிரதான சாட்சியாளரான சுரேஷ்குமாரை ஓய்வுபெற்ற பிரிகேடியர் ஷம்மி குமாரரத்ன அச்சுறுத்தினார் என்று சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான அதிகாரசபையின் விசாரணைப்பிரிவின் தலைவர் நேற்றைய தினம் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

ஷம்மி குமாரரத்னவின் தனிப்பட்ட கையடக்கத்தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பலமுறை சுரேஷ்குமார் அச்சுறுத்தப்பட்டார் என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் விடயங்களைப் பரிசீலித்த திருகோணமலை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஷம்மி குமாரரத்னவை ஜூன் 25 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

## கெஹலியவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் எனும் சந்தேகத்தின் பேரில் கெஹெலிய ரம்புக்வெலவின் இல்லத்தில் பணிப்பெண்ணாக இருந்த நிபுனி கிறிஷ்னஜினா ராஜபக்ச நேற்று புதன்கிழமை (11) இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

2021-2023 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஊடக, சுகாதாரத்துறை மற்றும் சுற்றாடல் அமைச்சராகப் பதவி வகித்தபோது ஹெகெலிய ரம்புக்வெல அவரது அமைச்சுக்கான அதிகாரிகள் மற்றும் தனக்கான தனிப்பட்ட ஊழியர்கள் எனக் காண்பித்து போலியான நியமனங்களை வழங்கியதன் ஊடாக அரச நிதியை மோசடி செய்ததாக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு தற்போது விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றது.

இம்மோசடியின் விளைவாக அரசாங்கத்துக்கு சுமார் 8 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இச்சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று கைதுசெய்யப்பட்டு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிபுனி ராஜபக்ஷவை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.06.2025இல் வெளியிடப்பெற்றது